**கரூர் நகராட்சியில் 2019ம் வருடம் அக்டோபர் மாதம் 30ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**

1)கரூர் நகராட்சிக்கு சொந்தமான தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி நீரேற்று நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 10HP, 20HP மற்றும் 25HP, 75HP மின்மோட்டாருக்கான (Coil Rewinding) பழுதுபார்க்கும் பணியினை மேற்கொண்டு குடிநீரேற்றுப் பணியினை தொடரும் பணியினை ரூ.3.15இலட்சம் மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ராக்டர், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.3,13,144/– நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | மல்லிகா இன்ஜினியரிங் கான்ட்ராக்டர், கரூர் | 0.14% குறைவு |
| 2 | நவலடியான் எலக்ட்ரிக்கல்ஸ் & ரீவைண்டிங், கரூர் | 1.33% அதிகம் |
| 3 | ராஜ் & கோ, தாந்தோணிமலை | 2.42% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/7406/19)

தீர்மான எண்.1847 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2)இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் 27.10.2019ம் அன்று நடைபெற உள்ள தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு அமைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு (25.10.2019, 26.10.2019 மற்றும் 27.10.2019) 3 தினங்கள் மட்டும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2019–2020ம் ஆண்டிற்கு குறுகிய கால பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி 11.10.2019 தேதி கோரியதில் பொதுஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.கே.முகமது இப்ராஹிம்<br>9/6ஏ, வடக்கு காசிம் தெரு<br>கரூர்.<br>செல் நெ.9003531343 | ரூ.50,000/–<br>IOB,D.D.No.630069/ 866300690<br>Dt.,10.10.2019 | ரூ.1,00,000/– |
| 2 | திரு.கே.முருகேசன்<br>48, பண்டரிநாதன் கோவில் தெரு, கரூர்<br>செல் நெ.7339572267 | ரூ.50,000/–<br>IOB, D.D.No.630070/ 866300700<br>Dt.,10.10.2019 | ரூ.92,000/– |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு**
1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட திரு.கே.முகமது இப்ராஹிம் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.1,00,000/– கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டை காட்டிலும் ரூ.12,000/– கூடுதலாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதியை எதிர்நோக்கி உயர்ந்தபட்ச கேள்வித் தொகை கோரிய ஒப்பந்ததாரருக்கு மீதித் தொகை செலுத்திய பின்பு ஒதுக்கீடு செய்யலாம்.

(அ6/11203/2018)

தீர்மான எண்.1848 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான மராமத்து வாகன எண்: TN47 F 1521-க்கு புதிய எக்சைடு மின்கலப்பெட்டி பொருத்திதர எக்சைடு நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற முகவரிடம் இருந்து விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி மராமத்து வாகன எண்: TN47 F 1521-க்கு -க்கு புதிய எக்சைடு மின்கலப்பெட்டி பொருத்திதர எக்சைடு நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற முகவரிடம் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

SUPPLY AND FIXING OF BATTERY TN47 U 1521/9/2019

| S.No | Name of the workshop | Amount |
|---|---|---|
| 1 | Battery World karur | Rs.7200 |
| 2 | Battery Point karur | Rs.7350 |
| 3 | Karur Battery Center karur | Rs.7600 |

மேற்படி பட்டியல் உள்ளபடி மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Battery World karur நிறுவனத்திற்க்கு வேலை உத்தரவு வழங்கவும் இதற்குன்டான உத்தேச செலவுத்தெகை ரூ.7200-யை குடிநீர் நிதியில் செலவினம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. பொறியாளர்ப்பிரிவு மராமத்து வாகன எண்: TN47 F 1521-க்கு பேட்டரி பொருத்தும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Battery World karur நிறுவனத்திற்க்கு வேலை உத்தரவு வழங்கவும் இதற்குன்டான உத்தேச செலவுத்தெகை ரூ.7200-யை குடிநீர் நிதியில் செலவினம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பொறியாளர் பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி வாகனத்திற்க்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்ப்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

( 8710/2018/H5)

தீர்மான எண்.1849 அனுமதிக்கப்பட்டது.

4)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான மகேந்திரா அன் மகேந்திரா தயாரிப்பு வாகன எண்: TN47 AB 7476-க்கு புதிய பவர்ஸ்டேரிங் கீர்பாக்ஸ் புதிய இரண்டு எண்ணிக்கை முகப்பு விளக்குகள் மற்றும் இற்றுப்போன ஐந்து எண்ணிக்கை கதவுகளின் அடிப்பாகங்களை புதிது மாற்றி தேவையான மராமத்து பணிகள் செய்ய மகேந்திரா அன் மகேந்திரா நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டவிதியின் 1920 பிரிவு 15-ன் கீழ் ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று .புதிய பவர்ஸ்டேரிங் கீர்பாக்ஸ் புதிய இரண்டு எண்ணிக்கை முகப்பு விளக்குகள் மற்றும் இற்றுப்போன ஐந்து எண்ணிக்கை கதவுகளின் அடிப்பாகங்களை புதிது மாற்றி தேவையான மராமத்து பணிகள் செய்ய மகேந்திரா அன் மகேந்திரா நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற சர்வீஸ் மகேந்திரா அன் மகேந்திரா நிறுவனம் Siva Auto Mobiles pvt,ltd., கரூர் நிறுவனம் ரூபாய்.1,10418-க்கு மதிப்பீடு பட்டியல் வழங்கி இருந்தது. மேற்படி மதிப்பீடு பட்டியல் உள்ளூர் சந்தை நிலவரத்திற்க்கு ஏற்ப்ப இருந்ததால் மகேந்திரா அன் மகேந்திரா நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனம் Siva Auto Mobiles pvt,ltd., வேலை உத்தரவு வழங்கி இதற்க்கு உண்டான செலவுத்தொகை ரூ.1,10418-யை உத்தரவு வழங்கியதையும் மேற்படி பொது நிதியில் செலவினம் செய்து கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும்.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்: TN47 AB 7476-க்கு புதிய பவர்ஸ்டேரிங் கீர்பாக்ஸ் புதிய இரண்டு எண்ணிக்கை முகப்பு விளக்குகள் மற்றும் இற்றுப்போன ஐந்து எண்ணிக்கை கதவுகளின் அடிப்பாகங்களை புதிது மாற்றவும்

மகேந்திரா அன் மகேந்திரா நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற சா்வீஸ் நிறுவனம் Siva Auto Mobiles pvt,ltd., கரூா் நிறுவனம் ரூ.ரூ.1,10418-யை உத்தரவு வழங்கியதையும் மேற்படி பொது நிதியில் செலவினம் செய்து கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பொறியாளா் பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலா் அவா்களின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி வாகனத்திற்க்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்ப்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

( 8709/2019/H5)

**தீர்மான எண்.1850 அனுமதிக்கப்பட்டது.**

5)கரூா் நகராட்சி பொறியாளா் பிரிவுக்கு சொந்தமான ஈப்பு வாகன எண்: TN47 AB 7476-க்கு 23,0000-க்க உண்டான சீட்டு மற்றம் மேட் ரிப்போ் பணிகள் அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி ஆணையா் அவா்களிடம் நகராட்சி சட்டவிதி 1920 பிரிவு 15-ன் கீழ் முன் அனுமதி பெற்று கோரப்பட்ட விலைப்புள்ளி அறிவிப்பில்.அரசு அங்கிகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு .

SEAT AND MAT REPAIR WORK OF TN47 AB 7476/9/2019

| S.No | Name of the workshop | Amount |
|---|---|---|
| 1 | Sri Bagyalakshmi Motors Erode | Rs.34370 |
| 2 | Murugan Autos Erode | Rs.39370 |
| 3 | Gayathri Manimegalai Auto works Erode | Rs.42370 |

மேற்படி பட்டியல் உள்ளபடி மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்திருந்த Sri Bagyalakshmi Motors Erode நிறுவனத்திற்க்கு வேலை உத்தரவு வழங்கியதையும் இதற்குன்டான செலவுத்தெகை ரூ.34370-யை குடிநீா் நிதியில் செலவினம் செய்ததையும் மன்றத்தின் பாா்வைக்கும் பதிவிற்க்கும்.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. கரூா் நகராட்சி பொறியாளா் பிரிவுக்கு சொந்தமான ஈப்பு வாகன எண்: TN47 AB 7476-க்கு 230000-க்க உண்டான சீட்டு மற்றம் மேட் ரிப்போ் பணிகள் செய்ய அரசு அங்கிகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொண்டதையும் இதற்குன்டான செலவுத்தெகை ரூ.34370-யை குடிநீா் நிதியில் செலவினம் செய்ததையும் பதிவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பொறியாளா் பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலா் அவா்களின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி வாகனத்திற்க்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்ப்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

( 8709/2018/H5)

**தீர்மான எண்.1851 அனுமதிக்கப்பட்டது.**

6) கரூா் நகராட்சி பொதுசுகதாரப் பிரிவுக்கு சொந்தமான டாடா ஏஸ் தயாரிப்பு வாகன எண்: TN47 AL 3584-க்கு சேதமான முன்பக்க கண்ணாடிக்கு பதிலாக புதிய முன்பக்க கண்ணாடி மாற்றி தர டாடா ஏஸ் வாகன விற்பனையாளரான LRN Motors Salem நிறுவனம் டாடா ஏஜஜி இன்சுரன்ஸ் நிறுவனத்திடம் காப்பீடு தொகை வசூலித்தது போக மீதம் உத்தேச மதிப்பீடு தொகை ரூபாய்.2000-யை அவ்வகானத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவா்களிடம் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும்.

மேற்படி வாகனத்திற்க்கு சேதமான முன்பக்க கண்ணாடிக்கு பதிலாக புதிய முன்பக்க கண்ணாடிகன் மாற்றி தர டாடா ஏஸ் வாகன விற்பனையாளரான LRN Motors Selam நிறுவனம் டாடா ஏஜஜி இன்சுரன்ஸ் நிறுவனத்திடம் காப்பீடு தொகை ரூபாய்.5282 வசூலித்தது போக மீதம் கண்ணாடியின் தேய்மான தொகை ரூபாய்.1554 கோரியுள்ளது.மேற்படி தொகையான ரூபாய்.1554-ஐ LRN Motors Salem நிறுவனத்திற்க்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. கரூா் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்: TN47 AL 3584-க்கு புதிய முன்பக்க கண்ணாடிகன் மாற்றி தர டாடா ஏஸ் வாகன விற்பனையாளரான LRN Motors Selam நிறுவனம் டாடா ஏஜஜி இன்சுரன்ஸ் நிறுவனத்திடம் காப்பீடு தொகை

ரூபாய்.5282 வசூலித்தது போக மீதம் கண்ணாடியின் தேய்மான தொகை ரூபாய்.1554 கோரியுள்ளது.மேற்படி தொகையான ரூபாய்.1554-ஐ LRN Motors Salem நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பொதுசுகாதார பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்ப்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

(7356/2018/H5)

தீர்மான எண்.1852 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்கன் குனியா மற்றும் இதர காய்ச்சல் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது வடகிழக்கு பருவமழை காலமென்பதால் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு கீழ்கண்ட மருந்துகளை தமிழ்நாடு மருந்துகள் வாணிப கழகத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர் 03.10.2019ல் தனது குறிப்பில் கோரியுள்ளார். எனவே, 2019–2020ம் ஆண்டிற்கு கீழ்கண்ட மருந்தினை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.5.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தேவையான பொருட்களின் விவரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1 | பைரத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் | 400 லிட்டர் |
| 2 | அபேட் | 400 லிட்டர் |
| 3 | பேசில்லஸ் துரின்ஜியாசிஸ் | 200 லிட்டர் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்
2)மேற்கண்ட செலவினத் தொகை ரூ.5.00இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)பொதுசுகாதாரப் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (எச்1/6417/2013)

தீர்மான எண்.1853 அங்கீகரிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் அனைத்து பொது கழிப்பிடங்கள் மற்றும் பேருந்துநிலையம், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமி நீக்கம் செய்யப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணம்புத்தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் போன்றவை கடந்த ஆண்டு வாங்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது இருப்பு மிகவும் குறைவான அளவில் உள்ளபடியால் 2019–2020ம் ஆண்டுக்கு நகராட்சி பகுதியில் கிருமி நாசினிகள் தெளிக்க தேவையான கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகிய பொருட்கள் பொதுமக்களின் பொது சுகாதார அத்தியாவசியம் கருதி கீழ்கண்ட பொருட்களை வாங்கி வழங்க துப்புரவு ஆய்வர்கள் 03.10.2019ல் தனது குறிப்பில் கோரியுள்ளனர் எனவே, 2019–2020ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பொருட்களை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.4.95லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | தேவையான பொருட்களின் விவரம் | தேவையாள அளவு |
|---|---|---|
| 1) | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 20 மெட்டிரிக் டன் |
| 2) | பிளிச்சிங் பவுடர் | 5 மெட்டிரிக் டன் |

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட செலவினத் தொகை ரூ.4.95லட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுதிக்கலாம்.

3)பொதுசுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம் .
(8707/2019/எச்1)

தீர்மான எண்.1854 அங்கீகரிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2019–2020ம் ஆண்டிற்கு கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை சப்ளை செய்யும் பணிக்கு 24.10.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நீர்த்த சுண்ணம்பு (கிலோ ஒன்றிற்கு) | பிளீச்சிங் பவுடர் (கிலோ ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| 1) | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் | ரூ.11.50 | ரூ.48 |
| 2) | ஸ்ரீ அர்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் | ரூ.12.00 | ரூ.49 |

<u>அலுவலகக் குறிப்பு</u>
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3)பொதுசுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் வர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கி பணிமேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (8707/2019/எச்1)

தீர்மான எண்.1855 அங்கீகரிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அரசு காலனியில் உள்ளதை நேராய்வு செய்ததில் இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் இயக்கப்படும் 8 எண்ணிக்கை 2எச்.பி., மின்மோட்டார்கள், Aerator pedal Wheel. Gear box ஆகிய பழுதடைந்த நிலையில் உள்ளதால் பழுதுபார்த்து இயக்குதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைத் ரூ.2.70இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.2.70இலட்சத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ5/8895/2019)

தீர்மான எண்.1856 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30ல் ஆர்.பி.கே. நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கம்பத்திற்கு புதிய மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்கக் கோரி மின்வாரியத்திற்கு இவ்வலுவலக கடிதத்தின் மூலம் அனுமதி கோரியதில் க.எண். உமிபொ/இகா/ந/தெ/கரூர்/கோ.கட்டு/எண்.133/19–20 நாள்.27.09.2019ன்படி மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.47,840/–யை செலுத்தக் கோரியதின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி பொறியாளர் / ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலர்

அவர்களின் முன்அனுமதியுடன் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை ரூ.47,840/—யை மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/8605/2019)

தீர்மான எண்.1857 அங்கீகரிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு—30ல் ஆதி மாரியம்மன் நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கம்பத்திற்கு புதிய மின்பாதை அமைத்து மின் இணைப்பு வழங்குமாறு இவ்வலுவலக கடிதத்தின் மூலம் அனுமதி கோரியதில் க.எண்.உமிபொ/இ.கா/ந/தெ/கரூர்/கோ.கட்டு/எண்.134/2019—2020 நாள்.01.10.2019ன்படி மின்வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.34,920/— செலுத்த கோரியதின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி பொறியாளர் / ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை ரூ.34,920/—யை மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/8604/2019)

தீர்மான எண்.1858 அங்கீகரிக்கப்பட்டது.

13)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு—30ல் அம்சா நகர் விஸ்தரிப்பு பகுதியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்குகள் அமைப்பதற்கு புதியதாக மின்பாதை அமைத்து மின்விளக்குகள் பொருத்தும் பணிக்கு மின்வாரியத்திடம் வரப்பெற்ற க.எண்.உமிபொ/இ.கா/ந/தெ / கரூர்/கோ.கட்டு/எண்.132/2019—2020 நாள்.27.09.2019ல் மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.24,849/—யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி இடத்திற்கு புதிய தெருவிளக்கு அமைக்க மின்வாரிய கேட்புத் தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த அவசர அவசியத்தினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் (பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.24,849/—யை தமிர்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/8603/2019)

தீர்மான எண்.1859 அங்கீகரிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 முதல் 32 வரையுள்ள ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் கேபிள்கள் மற்றும் பேனல் போர்டுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து சீராக குடிநீர் தவிர்த்து இதர பயன்பாட்டிற்கான நீரை விநியோகம் செய்ய வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு பராமரித்தல் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத்தொகை ரூ.7.00 இலட்சத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(9476/2019/இ3)

தீர்மான எண்.1860 அங்கீகரிக்கப்பட்டது.

15)வட்டாட்சியர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/978/2019, நாள்.10.10.2019ம் தேதியிட்ட கடிதத்தில் ஆச்சிமங்கலம் கிராமம் புல எண்.151/1—ல் மந்தை புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர்.0.85.0—ல் 0.80.0 ஏர்ஸ் நிலத்தினை கால்நடைப்பராமரிப்பு துறையிலிருந்து வருவாய்துறைக்கு நிலமாற்றம் செய்ய நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 0.85.0 ஹெக்டேர்—ல் 0.80.0 ஏர்ஸ் இடத்தினை கால்நடைப்பராமரிப்பு துறையிலிருந்து வருவாய்துறைக்கு நிலமாற்றம் செய்திட தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:—**

மேற்படி இடம் நகரளவு ஆவணங்களின்படி அரசு புறம்போக்கு மந்தை புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்ட இடமாகும். எனவே, மந்தை புறம்போக்கு 0.85.0 ஹெக்டேர்—ல் 0.80.0 ஏர்ஸ் நிலத்தினை கால்நடைப்பராமரிப்பு துறையிலிருந்து வருவாய்துறைக்கு நிலமாற்றம் செய்து வீட்டுமனைப்பட்டா வழங்க தடையின்மை சான்று வழங்கலாம். (எப்1/8982/2019)

தீர்மான எண்.1861 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலையில் S.F.No.1002/1ல் 8.17 ஏக்கர் பரப்பளவில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தும் விதமாக Compost Processing Plant segregation and Refinement Plant மற்றும் காய்கறி கழிவுகளிலிருந்து உயிரி எரிவாயு (Bio Methanation Plant) 5.0TPD திறன் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இந்த வளாகத்தின் உட்பகுதியில் சுற்றிலும் 42 எண்கள் 36 CFL பம்புகள் கொண்ட தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. இத்தெருவிளக்குகள் எரிவதற்கான மின்சாரம் Bio Gas Plant ல் எடுக்கப்படும் மின்சாரத்தை கொண்டு எரியவிடப்படுகிறது. இவ்வளாகத்தினுள் அமைக்கப்பட்டு தெருவிளக்குகள் நிறுவப்பட்டு நீண்ட நாட்களாகின்றபடியால் அதற்கென நிறுவப்பட்ட நிலத்தடி மின் கேபிள்கள் பல இடங்களில் எரிந்தும் அதனால் தெருவிளக்குகளும் பலமுறை பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த இயலாத சூழல் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள மின் கேபிள்களை புதிதாக மாற்றி அமைக்கவும், மின்கம்பங்களில் 30W LED விளக்குகள் பொருத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்காணும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.50இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.5.50 லட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/9369/2019)

தீர்மான எண்.1862 அனுமதிக்கப்பட்டது.

17)கரூர் நகராட்சியில் 2018—2019ம் ஆண்டில் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டு சேவை வரித் தொகை அலுவலகத்தில் உரியவர்களின் கணக்குத் தலைப்பில் ஆன்—லைன் மூலம் பதிவு செய்து பதிவு செய்யப்பட்ட சான்றினை சேவை வரி அலுவலகத்தில் சமர்ப்பிக்க மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனம் திரு.டி.சண்முகமூர்த்தி என்ற நிறுவனத்திற்கு பதிவு கட்டணம் செலுத்த உத்தேச செலவினம் ரூ.45,000/—க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (சி5/8009/2019)

தீர்மான எண்.1863 அனுமதிக்கப்பட்டது

18)கரூர் நகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 40 எச்.பி வெர்டிகள் மின்மோட்டாரின் ஸ்டாட்டர் வாங்கி பொருத்தும் பணிக்கு **ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | A Sun Power Engineers, Karur | 0.16% குறைவு |
| 2) | Dinesh Electricals, Coimbatore | 0.83% அதிகம் |
| 3) | Sun Electrical Service, Karur | 1.75% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A Sund

Power Engineers, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.3.75 லட்சத்தினை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ3/2017)

தீர்மான எண்.1864 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

19)கரூர் நகராட்சி பயன்பாட்டிற்காக நடமாடும் கழிப்பிடங்கள் (Mobile Toilet) சப்ளை செய்தல் பணிக்கு முதன்முறையாக 20.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00லட்சம்</u>**

1. சண்முக எலக்டீரிக்கல்ஸ் & இன்ஜீனியரிங் , கரூர் மதிப்பீட்டை விட 0.12% சதம் குறைவு
2. சரவணா எலக்டீரிக்கல்ஸ் மதிப்பீட்டை விட 3.20% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சண்முக எலக்டீரிக்கல்ஸ் & இன்ஜீனியரிங் , கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/2019)

தீர்மான எண்.1865 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

20) கரூர் நகராட்சி பேருந்து நிலைய கட்டிடத்தினை RMST டிவிசன் அலுவலக கட்டிடம் மராமத்து பணிகள் செய்தல் பணிக்கு முதன்முறையாக 20.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00லட்சம்</u>**

1. திரு.எம்.லோகநாதன், கரூர் மதிப்பீட்டை விட 0.22% சதம் குறைவு
2. RPS Construction. Karur மதிப்பீட்டை விட 2.85% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.லோகநாதன், கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ1/2019)

தீர்மான எண்.1866 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

21)கரூர் நகராட்சி வார்டு எண்.30 மற்றும் 31 அருணாச்சல நகர் 3வது மற்றும் 4வது குறுக்குத் தெரு, சங்கர் நகர், குடியரசு தெரு, பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளில் மின் மோட்டார்கள், குழாய்கள் மற்றும் கேபிள்கள் பொருத்தும் பணிக்கு முதன்முறையாக 20.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00லட்சம்</u>**

1. KPD Contractors, கரூர் மதிப்பீட்டை விட 0.25% சதம் குறைவு
2. PRG Contractors, கரூர் மதிப்பீட்டை விட 3. 60% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை
3. மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள KPD Contractors, கரூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். **(இ1/2019)**

தீர்மான எண்.1867 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

22)கரூர் நகராட்சி கரூர் நகராட்சியில் பாதாள சாக்கடை மூடி 100 எண்ணிக்கை (FRC Manhole cover with frame) பணிக்கு முதன்முறையாக 20.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.3.20லட்சம்</u>**

1. சின்னம்மாள் எண்டர்பிரைசஸ், மணப்பாறை மதிப்பீட்டை விட 0.26% சதம் குறைவு
2. ஸ்ரீ அம்பாள் எண்டர்பிரைசஸ் & Mohan Power Infra, Chennai மதிப்பீட்டை விட 2. 25% சதம் அதிகம்

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை
3. மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **சின்னம்மாள் எண்டர்பிரைசஸ், மணப்பாறை** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். **(இ1/2019)**

தீர்மான எண்.1868 அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

23)கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதி வார்டு எண்.1 முதல் 14 வரையுள்ள பகுதிகளுக்கு வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுகாதாரமான குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கைப்பிடி சுவர், கேட் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50இலட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(இ3/6991/2019)**

தீர்மான எண்.1869 அனுமதிக்கப்பட்டது.

24)இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் 96 எண்கள் சிறுமின் விசைப் பம்புகள் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீரல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. சிறுமின் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்க்க போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் தனியார் ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00இலட்சத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். **(இ3/8661/2019)**

தீர்மான எண்.1870 அனுமதிக்கப்பட்டது.

25) கரூர் நகராட்சி இனாம் கரூர் பகுதி குடிநீர் விநியோக திட்டத்தில் நீரேற்று குழாய் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் கசிவுகளையும் பகிர்மான குழாய்களில் உள்ள சுலீஸ் வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மற்றும் குடிநீரல்லாத ஆழ்துளை கிணறுகளின் மூலம் விநியோகம் செய்யும் தண்ணீர் குழாய்கள் மற்றும் கேட் வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணியினை பணியினை மேற்கொண்டு குடிநீரேற்றுப் பணியினை தொடரும் பணியினை **ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில்** உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **சண்முகா எலக்டீரிக்கல்ஸ் & இன்ஜீனியரிங், கரூர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.4,93,022/- நகராட்சி குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம்</u>

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | சண்முகா எலக்ட்டீரிக்கல் &இன்ஜீனியரிங், கரூர் | 0.13% குறைவு |
| 2) | ஸ்ரீ சரவணா எலக்டிரிக்கல்ஸ் கரூர் | 1.34% அதிகம் |
| 3) | டி.சுந்தர்ராஜ், கரூர் | 2.23% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மான எண்.1871 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

26)இந்நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீரல்லாத உபயோகத்திற்கு சிறுமின் விசைப்பம்புகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பட்டியலில் கண்டுள்ள இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசைப்பம்புகளின் மோட்டார்கள் தொடர் இயக்கத்தின் காரணமாகவும் பழுதடைந்தும் பம்புகள் வெடித்தும் மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. பழுதடைந்த மோட்டார் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | வார்டு–37 | காந்திகிராமம் பூங்கா பின்புறம் MPP |
| 2 | வார்டு–37 | காந்திகிராமம் பெண்கள் விடுதி அருகில் MPP |
| 3 | வார்டு–39 | இராயனூர் தில்லை நகர் MPP |
| 4 | வார்டு–39 | காந்தி நகர் MPP |
| 5 | வார்டு–39 | இராயனூர் தில்லை நகர் MPP |
| 6 | வார்டு–42 | பழைய சுக்காலியூர் சத்தியசீலன் வீடு அருகில் MPP |
| 7 | வார்டு–48 | காளியப்பன் ராசி நகர் MPP |

மேற்கண்ட இடங்களில் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த இயலாத மின்மோட்டார்களுக்குப் பதில் புதிய மின்மோட்டார்கள் மற்றும் தேவையான உதிரிபாகங்கள் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்தை குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (இ3/8320/2019)

தீர்மான எண்.1872 அங்கீகரிக்கப்பட்டது.

27)இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டு பண்டிகை முன்பணம் கடிதம் எண்.47201/B,Cooral/2019 நாள்.23.09.2019ன்படி ரூ.5000/–லிருந்து ரூ.10,000/– வரையிலும், தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு ரூ.2,000/–யிலிருந்து ரூ.4,000/– வரையிலும் உயர்வு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)உயர்வு செய்யப்பட்ட தொகையை முன்பணமாக வழங்கலாம்.

தீர்மான எண்.1873 அனுமதிக்கப்பட்டது..

28)மல்லிகா இன்ஜினியரிங் கரூர் அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.3,27,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (பி6/11622/2017)

தீர்மான எண்.1874 அனுமதிக்கப்பட்டது.
.

29)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 வடக்கு மடவிளாகம் தெருவிலுள்ள ஆணையாளர் குடியிருப்பில் சிமெண்ட தரைத்தளம் பழுதடைந்த நிலையிலுள்ளதால் புதியதாக tiles பதித்தல் மற்றும் குளியலறை பகுதிகளில் புதியதாக டைல்ஸ் பதித்தல் பணிகளை மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்கள் தெரிவித்ததின் பேரில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.85 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.4.85 இலட்சத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/9457/2019)

தீர்மான எண்.1875 அனுமதிக்கப்பட்டது..

30) கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 வடக்கு மடவிளாகம் தெருவிலுள்ள ஆணையாளர் குடியிருப்பில் மர ஜன்னல்கள் பழுது ஏற்பட்டுள்ளதால், புதிய UPVC ஜன்னல்கள், இரும்பு கேட்டுகள் பழுது பார்த்தல், மேற்கூரை பழுதுபார்த்தல் உட்புறம் மற்றும் வெளிப்பு சுவர்களில் வர்ணம் பூசுதல் போன்ற மராமத்து பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்கண்ட மராமத்து பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.4.90 இலட்சத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/9458/2019)

தீர்மான எண்.1876 அனுமதிக்கப்பட்டது..

**31)** கரூர் நகராட்சி பொதுசுகதாரப் பிரிவுக்கு சொந்தமான டாடா ஏஸ் தயாரிப்பு வாகன எண்கள்: TN47 AL 6711, 6703,6739, 6727,6729,6741 ,6770,6783,6784 ,6774 , 6793 முதலாவது சர்வீஸ் பணிகள் செய்ய டாடா ஏஸ் நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி வாகனத்திற்க்கு புதிய டயர்கள் மற்றும் மராமத்து பணிகள் செய்ய டாடா ஏஸ் நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனம் Sri CM Motors கரூர் நிறுவனம் வாகனம் ஒன்றிற்க்கு ரூபாய்.2875-வீதம் 11 வாகனங்களுக்கு ரூபாய்.31625 வழங்கியுள்ளது. மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி மதிப்பீடு பட்டியல் உள்ளூர் சந்தை நிலவரத்திற்க்கு ஏற்ப இருப்பதால் டாடா ஏஸ் நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனம் Sri CM Motors வேலை இதற்க்கு உண்டான செலவுத்தொகை ரூ.31625-யை உத்தரவு வழங்கி மேற்படி செலவினத்தை பொது நிதியில் செலவினம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்: வாகன எண்கள்: TN47 AL 6711, 6703,6739, 6727,6729,6741 ,6770,6783,6784 ,6774 , 6793 முதலாவது சர்வீஸ் பணிகள் செய்ய டாடா ஏஸ் நிறுவனத்தின் அங்கிகாரம் பெற்ற சர்வீஸ் நிறுவனம் Sri CM Motors கரூர் நிறுவனம் ரூ.31625-யை உத்தரவு வழங்கி மேற்படி செலவினத்தை பொது நிதியில் செலவினம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுசுகாதார பிரிவு வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி வாகனத்திற்க்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்ப்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

( 6928/2018/H5)

தீர்மான எண்.1877 அனுமதிக்கப்பட்டது..

**32)**கரூர் நகராட்சி பொறியர் பிரிவுக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்டத்தில் JETROD சுமந்து செல்லும் வாகன எண்.TN 47 U 5179 க்கு தகுதி சான்றிதழ் பெற வாகனம் தேவையான மராமத்து பணிகள் செய்து முடிக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.145000/—க்கு குடிநீர் விநியோக நிதியில் செலவினம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)**மேற்படி பொறியர் பிரிவுக்கு சொந்தமான பாதாள சாக்கடை திட்டத்தில் JETROD சுமந்து செல்லும் வாகன எண்.TN 47 U 5179 க்கு தகுதி சான்றிதழ் பெற வாகனம் தேவையான மராமத்து பணிகள் செய்து முடிக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.**145000/—**க்கு குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**3)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்திற்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/6509/2019)**

தீர்மான எண்.1878 அனுமதிக்கப்பட்டது..

**33)**கரூர் நகராட்சி பொறியர் பிரிவுக்கு சொந்தமான குடிநீர் விநியோக பணி வாகன எண். TN 47 AD6306 க்கு தகுதி சான்றிதழ் பெற வாகனம் தேவையான மராமத்து பணிகள் செய்து முடிக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.155000/—க்கு குடிநீர் விநியோக நிதியில் செலவினம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

**1)**மேற்படி நகராட்சி பொறியர் பிரிவுக்கு சொந்தமான குடிநீர் விநியோக பணி வாகன எண். TN 47 AD6306க்கு தகுதி சான்றிதழ் பெற வாகனம் தேவையான மராமத்து பணிகள் செய்து முடிக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.**155000/—**க்கு குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**3)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்திற்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/6508/2019)**

தீர்மான எண்.1879 அனுமதிக்கப்பட்டது..

**34)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவுக்கு சொந்தமான குடிநீர் விநியோகப் பணி வாகன எண். TN 47 AD6306 க்கு தகுதி சான்றிதழ் பெறுவதற்கான ரிப்பேர் மற்றும் மராமத்து பணிகள் செய்ய **18.09.2019**ம் தேதியன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

Repair and Maintenance work for FC of TN 47 AD 6306

| Sl.No. | Name of Workshop | Rate of Quote % | Amount (Rupees) |
|---|---|---|---|
| 1 | JVK AUTO DISEL WORKS, SALEM | -0.29 | 153650.00 |
| 2 | JAHANGIR MOTORS SALEM | 3.11 | 158900.00 |

அலுவலகக் குறிப்பு

**1)**மேற்படி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் இருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் JVK AUTO DISEL WORKS, SALEM என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.**153650.00**க்குண்டான செலவினத்தை குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்திற்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/6508/2018)**

தீர்மான எண்.1880 அனுமதிக்கப்பட்டது..

**35)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவுக்கு சொந்தமான UGD வாகன எண். TN 47 U 5179 க்கு தகுதி சான்றிதழ் பெறுவதற்கான ரிப்பேர் மற்றும் மராமத்து பணிகள் செய்ய **18.09.2019**ம் தேதியன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

Repair and Maintenance work for FC of TN 47 U 5179

| Sl.No. | Name of Workshop | Rate of Quote % | Amount (Rupees) |
|---|---|---|---|
| 1 | SRI BAGYALAKSHMI AUTO DISEL WORKS, EORDE | -2.4 | 143900 |
| 2 | MURUGAN AUTOS ERODE | 3.5 | 149300 |

அலுவலகக் குறிப்பு

**1)**மேற்படி அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் இருந்து வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SRI BAGYALAKSHMI AUTO DISEL WORKS, EORDE என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.**143900**க்குண்டான செலவினத்தை குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத்திற்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(எச்5/6509/2018)**

தீர்மான எண்.1881 அனுமதிக்கப்பட்டது..